**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.124 /2019**
**connected with**
**அசல் வழக்கு எண்.103 /2019**

2023 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 23–ம் நாள் புதன்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 23.08.2023 | தந்தை/கணவர் பெயர்: | முருகேசன் |
| பெயர்: | திரிபுரசுந்தரி (PW1 chief continuation) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | தொழுதூர் | சமயம்: | |
| சாதி: | | வயது : | 61 /2023 |
| தொழில்: | | | |

**முதல் விசாரணை தொடர்ச்சி :23.08.2023**

இடைமனு எண்.02/2021, நாள் 20.04.2022-ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி அசல் வழக்கு எண்.103/2019-ம் மேற்படி வழக்கும் இணைந்து விசாரணை நடத்த அனுமதிக்கப்பட்டது.

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யபப்பட்டு முதன்மை விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.

அசல் வழக்கு எண்.124/2019-ல் 3-ம் பிரதிவாதி லெட்சுமி வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் இறந்துவிட்டார். 3-ம் பிரதிவாதியின் வாரிசுகள் தான் 1, 2 பிரதிவாதிகள் ஆவார்கள். 3-ம் பிரதிவாதிக்கு 1, 2 பிரதிவாதிகள் தவிர இதர வாரிசுகள் உள்ளார்கள். நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதால் இதர வாரிசுதாரர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக நான் சேர்க்கவில்லை.

அசல் வழக்கு எண்.103/2019-ல் 1-ம் வாதி லெட்சுமி இறந்துவிட்டார். இறந்த லெட்சுமியின் வாரிசுகளை தரப்பினர்களாக சேர்க்கவில்லை. 1-ம் வாதியான லெட்சுமியின் வாரிசுகளை சேர்க்காதனால் வழக்கை தள்ளுப்படி செய்யதக்கது. எனவே அசல் வழக்கு எண்.103/2019-ஐ தள்ளுபடி செய்தும் அசல் வழக்கு எண்.124/2019-ஐ தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.